செ.வெ.எண்-29 நாள்-18.01.2018

# அரியலூர் மாவட்டம், திருமானூர் பேருந்து நிலையத்தில் பல்வேறு விழிப்புணர்வு தொடர்பான குறும்படங்கள் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் சார்பில் அதிநவீன மின்னணு விளம்பரத்திரை வாகனத்தின் மூலம் காண்பிக்கப்பட்டது.

அரியலூர் மாவட்டத்தில் 6 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட கிராமங்களில் உள்ள கிராமப்புற மற்றும் பொதுமக்கள் அனைவரும் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் அதிநவீன மின்னணு விளம்பரத்திரை வாகனத்தின் மூலம் தூய்மை பாரத இயக்கம், டெங்கு விழிப்புணர்வு, சாலை பாதுகாப்பு தொடர்பான குறும்படங்கள், எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா தொடர்பான குறும்படங்கள் மற்றும் தமிழக அரசின் சாதனைகள், திட்டங்கள் குறித்து மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் பல்வேறு விழிப்புணர்வு தொடர்பான குறும்படங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதி மற்றும் குக்கிராமங்களிலும் மாதந்தோறும் விழிப்புணர்வு படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக (17.01.2018) அன்று செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் சார்பில் அதிநவீன மின்னணு விளம்பரத் திரை வாகனத்தின் மூலம் விழிப்புணர்வு தொடர்பான குறும்படங்கள் **திருமானூர் ஊராட்சியில் பேருந்து நிலையத்தில்** காண்பிக்கப்பட்டது.

இதனை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டு, இந்த விழிப்புணர்வு குறும்படங்கள் எங்களுக்கு பயன் உள்ளதாக இருந்தது என பார்வையிட்ட பொதுமக்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ரெ.மதியழகன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) க.சரவணன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்) ச.சிவக்குமார் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**